அவர்கள் சுகாதாரத் துறையில் கேட்ட அத்தனை கோரிக்கைகளையும் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் சொன்னதுபோல் இந்த இராமபட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசினுடைய மிகக் கனிவான பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய எதிர்பார்ப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் பூர்த்தி செய்வார்கள் என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

மாணவர்கள் விடுதி

***58202—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்றென்றும் வணங்கும் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பான ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

2020 செப்டம்பர் 15]

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், மயிலாப்பூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதியை புதியதாக அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தில் 131 காவல் துறை மற்றும் சீருடை பணியாளர்களுக்கு பதக்கம் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பதக்கம் பெறும் களப் பணியாளர்களுக்கு எனது இதயமார்ந்த வாழ்த்துகள்.

முற்பகல் 11–30

கொரோனா தொற்று உலகையே அச்சுறுத்தி வருகிறது. அம்மாவின் அரசு, நிலவி வரும் சூழ்நிலைக்கேற்ப, தடுப்பு நடவடிக்கை, பிரத்யேக சிகிச்சை முறைகளைக் கையாண்டு மருத்துவ சேவை நல்ல முறையில் மக்களுக்குச் சென்றடைய எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. கொரோனா, புதிய தொற்று. இதற்குத் தடுப்பூசி கிடையாது. சிகிச்சை முறையும், நோயாளியின் உடல்நிலை மற்றும் அவருக்கு உள்ள இணை நோய்கள், அதனடிப்படையில் தரப்படுகின்றது. இந்த நோயால் பாதிக்கப்படாத நாடு இல்லை. நிருவாகம் எடுத்துவரும் செயல்முறைகளில் எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம். இதில் தனி நபர் சுகாதாரம், முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது, போக்குவரத்தைத் தவிர்த்தல் போன்ற அடிப்படை தற்காப்பு நடவடிக்கைகள் முக்கியம். அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைக்க நிருவாகம் சுணக்கமின்றி செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது. தினசரி ஊதியம் பெற்று துயர்படுபவரின் பாதிப்பை சமன் செய்ய, அரசு நிவாரணம் என்ற முறையில் பணமாகவும், நியாய விலைக் கடைகள்மூலம் விலையில்லா அத்தியாவசியப் பொருட்களாகவும் வழங்கி வருகிறது. இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் கொரோனா பரிசோதனை அதிகம். இந்த அளவுக்கு முன்னின்று மக்களோடு மக்களாக இணைந்து இக்கட்டான சூழ்நிலையில்

அரசுத் துறைகளை ஊக்குவித்து பணிகளை நிறைவேற்றும் முன்மாதிரி முதலமைச்சர் தமிழக முதலமைச்சர் அவர்கள் என்பதில் சந்தேகமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், களத்தில் கொரோனாவை எதிர் நின்று போராடிவரும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர் ஆகியோரின் தன்னலமற்ற செயல்பாடுகள் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியன. கடந்த பத்து வருடங்களாக அம்மாவின் அரசின் சீர்மிகு நடவடிக்கைகளினால் 38,000 தொழிற்சாலைகள்மூலம் 23 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மகாராஷ்டிரா மாநிலத்தில் 28,000 தொழிற்சாலைகள்மூலம் 18 இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். G.D.P.–ல் 18 இலட்சம் கோடி ரூபாய், மேல் படிப்பு சேருவதில் Gross Enrolment Ratio 49 சதவிகிதம், இந்திய சராசரி 26 சதவிகிதம்; மற்ற மாநிலங்களைவிட தமிழகம் 15 வருடங்கள் முன்னிலை; சுகாதாரத் துறையில் IMR, MMR உள்ளிட்ட குறியீடுகளில் முதலிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மூலக் கேள்வியையொட்டி கேளுங்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் வாழ்வாதாரம் உயர்ந்ததால் 80 சதவிகிதம் நடுத்தர வகுப்பினரைக்கொண்டு, தனி மனித வருவாயில் முதலிடம் என்று தமிழகம் வளர்ச்சிப் பாதையில் முதலிடத்தில் உள்ளது. நோபல் பரிசு பெற்ற அமிர்த்யா சென் கூறியதுபோல, தமிழகத்தை வளர்ச்சி பெற்ற மேலை நாடுகளோடு ஒப்பிட வேண்டும்; மற்ற மாநிலங்களோடு அல்ல என்பது உண்மை. தமிழ்நாட்டிற்கு மேலும் அதிக அளவில் முதலீடுகளைக் கொண்டு வர வேண்டும். பொருளாதாரத்தை மேம்படுத்த டாக்டர் ரங்கராஜன் தலைமையில் நிபுணர் குழு அமைத்து நாட்டுயர்வே பிரதானம் என்று முழு வீச்சில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை தமிழக மக்கள் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், நீங்கள் உரை நிகழ்த்தக் கூடாது. கேள்வி கேட்டிருக்கிறீர்கள். துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

2020 செப்டம்பர் 15]

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த பாதையில் சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான கல்வி நிலையங்கள் கொண்ட மயிலாப்பூர், கல்வி பயில உகந்த இடம். மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, 125–வது வார்டு, கைலாசபுரம் 3–வது தெருவில், தனியார் கட்டடத்தில் அரசு கல்லூரி மாணவர் விடுதி செயல்பட்டு வந்தது. 175 மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க அரசின் அனுமதியும் இருந்தது. இவ்விடுதியில் சுமார் 62 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். போதிய அடிப்படை வசதிகள் இல்லாததால், 2014–2015 ஆம் கல்வியாண்டில் இவ்விடுதி ஓட்டேரிக்கு மாற்றப்பட்டது. மயிலாப்பூர் தொகுதியிலுள்ள 63 குடிசைப் பகுதிகளில் சுமார் ஒரு இலட்சம் பேர் வசித்து வருகின்றனர். மேலும் இப்பகுதியில் ஒரு இலட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்கள் அதிகம் உள்ளன. இக்குடும்பங்களில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையிலும், மற்ற மாணவர்கள் இங்கு வந்து பயிலும் வகையிலும் மயிலாப்பூரில் புதிய மாணவர் விடுதிக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் 1,354 விடுதிகள் உள்ளன. சென்னை மாவட்டத்தில் 16 விடுதிகள் உள்ளன. சென்னை மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 1,570 மாணவ, மாணவியரில் 2019–2020 ஆம் கல்வியாண்டில் 1,519 மாணவ, மாணவியர் தங்கிப் பயனடைந்துள்ளனர். இந்த விடுதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவ மாணவியர் எண்ணிக்கையில் 51 இடங்கள் காலியாக உள்ள நிலையில், மயிலாப்பூரில் கூடுதலாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியினைத் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருட நிதிநிலை அறிக்கையில், மயிலாப்பூரில் 5 புதிய பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி கட்டப்படும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டது. மயிலாப்பூரில் கட்டடம் கட்டப்படும் என்று எதிர்பார்த்தோம். மயிலாப்பூரில் மாணவர்கள் விடுதி மிகவும் அவசியம். ஏனென்றால், அங்கு அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருக்கின்றன, மாணவர்கள் அங்கு தங்கி கல்வி பயில விரும்புவார்கள் என்பதால், அந்த விடுதிக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக வலியுறுத்தி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) வாய்ப்பு அளிக்கிறேன்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

முதலமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துதல் குறித்த தகவல் தொழில்நுட்பத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். இன்று,